<u>IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI</u>

OS. No. 133/2013 Date: 19.06.2023

PW1- சத்யபிரபா

சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் 2,3ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

வழக்கு சொத்து 27.05.1987ல் என் தாயார் கிரயம் வாங்கியது என்றால் சரிதான். அந்த கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.1. அந்த கிரய சொத்தை 08.12.2003ம் தேதியில் நானும், என் அம்மா மற்றும் சகோதரர் ஆகியோருடன் சேர்ந்து மணி என்பவர் பெயருக்கு பொது அதிகாரப்பத்திரம் எழுதி கொடுத்தோம் என்றால் சரிதான். மணி என்பவர் 23.01.2004ம் வருடம் அந்த சொத்தை நாச்சிமுத்து, ஈஸ்வரி, மங்கமலை ஆகியோருக்கு கிரயம் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் அண்ணன் பிரதீப் 10 வருடங்களாக வெளிநாட்டில் பணிபுரிகிறார். நான் என் அப்பா, என் அம்மாவுடன் ஒன்றாக வசிக்கிறோம் என்றால் சரியல்ல. எனக்கு என் அப்பாவுடன் பேச்சுவார்த்தை இல்லை. அம்மாவுடன் தான் பேச்சுவார்த்தை உள்ளது. இன்று என் அம்மா நீதிமன்றத்திற்கு வந்துள்ளார். மணி என்பவருக்கு நாங்கள் பொது அதிகாரம் கொடுத்து வழக்கு சொத்தை விற்பனை செய்துவிட்டு நாங்களும், என் அப்பாவும் கூட்டுசேர்ந்து கொண்டு பொய்யாக தாவா தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் என் அம்மா, அண்ணன் அனைவரும் மணி என்பவர் மூலம் நாங்கள் கிரயம் கொடுத்த நபர்களை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எங்கள் குடும்பத்தாருக்கு மொத்தம் 4.88ஏக்கர் நிலம் பாகப்பிரிவினை மூலம் பாத்தியப்பட்டது. நான் 53 - 1/2 செண்ட் நிலத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மீதமுள்ள நிலத்தை பொறுத்து ஏன் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால், தாவா நிலத்தை எங்களுக்கு தெரியாமல் விற்பனை செய்துவிட்டார். சண்முகம் என்பவருக்கு நாங்கள் 1 ஏக்கர் 47 செண்ட் நிலம் விற்பனை செய்துள்ளோம் என்றால் சரிதான். அந்த கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.2. அந்த கிரய நிலத்தில் தாவா சொத்தும் அடங்கும் என்றால் சரியல்ல. நானும், என் அம்மா, என் அண்ணன் ஆகியோர் சேர்ந்து மணி என்பவருக்கு பவர் பத்திரம் கொடுத்து தாவா சொத்தை விற்பனை செய்துவிட்டதால் இத்தாவா தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல.

ஒப்பம்/- சத்யபிரபா

ஒப்பம்/- ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி,
சங்ககிரி.